**<u>OS.NO. 43/2008 PW-1</u>**

நாள் : 13.08.2024

பெயர் : முரளி

த/பெ : தனுஷ்கோடி

<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

உங்களுக்கு என்ன வயது ஆகிறது என்றால் 50 ஆகிறது. நான் ஆற்காடு பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன் என்றால் மேற்கண்ட முகவரியில 50 ஆண்டுகளாக வசித்துவருகிறேன். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் கே வேலூரில் உள்ளது. வழக்கு சொத்து அமைந்துள்ள சா்வே எண் நான்கு எல்லைகள் மற்றும் அளவு தெரியுமா என்றால் தெரியும் 416 சதுர மீட்டர் சர்வே எண் 265ல் உள்ளது. அதற்கு கிழக்கு மேற்கு 10 கஜம், வடக்கு தெற்கு 14 1/4 கஜம் சாட்சி மீண்டும் சர்வே எண் 265 அல்ல 165 பதிவு செய்கிறார். மேற்சொன்ன சொத்தில் முழுவதுமாக நிலம் உள்ளதா வீடு உள்ளதா என்றால் தெற்கு பக்கத்தில் வீடும் மற்ற இடம் நிலமாக உள்ளது. வீடு மெத்தைவீடாகும்.

அந்த வீடு 1985ல் கட்டப்பட்டது. 1985ம் வருடம் வீட்டை யார் கட்டினார்கள் என்றால் நான் தான் கட்டினேன். நீங்கள் 1985ல் வீடு கட்டுவதற்கு முன்பாக அங்கே என்ன இருந்தது என்றால் ஓட்டு வீடு இருந்தது. எங்கள் குடும்பம் அங்கு தான் வசித்து வந்தது. அந்த வீட்டில் குடும்பமாக வசித்து வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளதா என்றால் வரி ரசீது உள்ளது. அந்த வீட்டில் முகவரி என்ன என்றால் தென்னான்ட வீதி கதவு இலக்கம் 1. யார் பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் தனுஷ்கோடி பெயரில் உள்ளது. அவர் யார் என்றால் அவர் என் அப்பா. உங்கள் அப்பா தனுஷ்கோடி எந்த வருடம் சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் 1970 வருடம் ஆதிகேசவலு முதலியார் வகையறா விடம் வாங்கினார். கிரய பத்திரத்தில் சொத்தில் வீடு அமைந்திருந்ததா நிலம் அமைந்திருந்ததா தட்டு

ஓடு வீடு இருந்தது. ஆதிகேசவலு முதலியார் பெயரில் சொத்தின் ஆவணம் இருந்ததா என்றால் இல்லை. கிரய பெறுவதற்கு முன்பாக வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் ஆதிகேசவலு முதலியார் பெயரில் இருந்தது.

ஆதிகேசவலு முதலியார் பெயரில் வரி கட்டியதற்கான ரசீதை வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஆதிகேசவலு முதலியார் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. அவர் வாரிசு பெயரில் இருந்தது. மேற்கண்ட சொத்து குழந்தைவேலு முதலியார் பெயரில் இருந்ததா என்றால் ஆமாம். குழந்தைவேலு முதலியாருக்கு நேரடியான வாரிசு யாரும் கிடையாது என்றால் ஆமாம். குழந்தைவேலு முதலியார் ஆதிகேசவலு முதலியார் பெயருக்கு மேற்கண்ட சொத்து குறித்து ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. குழந்தைவேலு முதலியாருக்கு மனைவி இருந்தாரா என்றால் இருந்தார் ஆனால் காலமாகிவிட்டார். குழந்தைவேலு முதலியார் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. குழந்தைவேலு முதலியார் இறப்பதற்கு 10 வருடம் முன்பாக அவர் மனைவி இறந்து விட்டார் என்று செவி வழியாக தெரிந்து கொண்டேன். குழந்தைவேலு முதலியாருக்கு உடன் பிறந்தவர் யாரும் கிடையாது.

சாட்சி மீண்டும் குழந்தைவேலு முதலியாருக்கு சகோதரர்கள் இருந்ததாக பதிவு செய்கிறார். குழந்தைவேலு முதலியாருக்கு ஒரே ஒரு சகோதரர் இருந்தார் அவர் பெயர் ராஜசேகர் முதலியார். ராஜசேகர் முதலியார் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ராஜசேகர் முதலியார் ஆரணியில் வசித்தார். குழந்தைவேலு முதலியாரயோர ராஜசேகர் முதலியாரயோ நீங்கள் நேரடியாக பார்க்க வில்லை என்றால் சரி. நீங்கள் சொல்வது போல் குழந்தைவேலு முதலியார் ராஜசேகர் முதலியாருக்கு சகோதரர் இல்லை என்று சொன்னால் அது தவறு. வழக்கு சொத்தை தற்போது யார் அனுபலத்தில் உள்ளது என்றால் பத்மநாபன் வாடகை விட்டிருக்கிறேன்.

1980லிருந்து பத்மநாபன் வழக்கு சொத்தில் வாடகையில் இருக்கிறார். வாடகையை வசூலித்து இருக்கிறாரா என்றால் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்த பிறகு வாடகை வசூலிக்கவில்லை. எந்த காலகட்டத்தில் பத்மநாபனுக்கு வாடகை விடப்பட்டது என்றால் 1975ல் வாடகை விடப்பட்டது என்று என் அப்பா கூறினார். நானும் அதை தொடர்ந்து வந்தேன். பத்மநாபனுக்கு வாடகைவிட்டதற்கு ஆவணமாக வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றால் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. வழக்கு சொத்தை எவ்வளவு வாடகைக்கு விட்டிற்கள் என்றால் ஆதியில் 30ரூக்கு விட்டேன்.

இறுதியாக 100ரூ வரை வசூலித்து வந்தேன். 2002 வரை வாடகை வசூலித்து வந்தேன். நீதிமன்றத்தல் வழக்கு தாக்கல் செய்ததால் நான் வசூலிக்கவில்லை. வாடகை ரசீதுகள் எதாவது வைத்துள்ளீர்களா என்றால் இல்லை.தற்போது  சொத்துவரி யார் பெயரில் உள்ளது என்றால் 2000ல் இருந்து பத்மபநாபன்  பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்கு 2000 ஆண்டு முதல் யார் வரி கட்டினார்கள் என்றால் நான் கட்டுவது இல்லை யார் கட்டுகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மின்சார இணைப்பு வழக்கு சொத்து வீட்டிற்கு உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்து பத்மநாபன் பெயரில் மின்சார இணைப்பு உள்ளது. அருகாமையில் உள்ள அவரது வீட்டின் மின் இணைப்பை என்னுடைய வீட்டிற்கும் நீடித்து கொண்டார். மின்சார வாரியத்திற்கு பத்மநாபன் மின் இணைப்பை தவறாக பயன்படுத்துகிறார் என்றால் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது தவறு அவ்வாறு தவறாக பயன்படுத்தியிருந்தால் பத்மநாபன் பெயரில் நடவடிக்கை எடுத்து இருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அவர் பெயரில் தான் உள்ளது. வழக்கு போடுவதற்கு 10 வருடங்களுக்கு முன்பிலிருந்தே பட்டா பத்மநாபன் பெயரில் தான் இருந்து வருகிறது. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் பிரதிவாதிகளுக்கு சொத்து உள்ளது என்றால் ஆமாம்.

பிரதிவாதிகள் அவருடைய சொத்து மற்றும் வழக்கு சொத்தையும் சேர்த்து அனுபவித்து வருகிறார்களா என்றால் ஆமாம். அண்ணாசாமி முதலியார் யார் என்றால் ஒன்று விட்ட பங்காளி. அண்ணாசாமி முதலியாருக்கு குழந்தைவேலு முதலியாருக்கும் என்ன உறவுமுறை என்றால் எந்த உறவுமுறையும் கிடையாது. அண்ணாசாமி முதலியார் குழந்தைவேலு முதலியாருக்கு சொத்து எதாவது கிரயம் கொடுத்திருக்கிறாரா என்றால் மனை எண் இரண்டை கொடுத்திருக்கிறார்.

அண்ணாசாமி முதலியாருக்கும் பத்மநாபனுக்கும் என்ன உறவுமுறை என்றால் அண்ணாசாமி முதலியார் மகன் பத்மநாபன் ஆவார். பத்மநாபன் தகப்பனார் அண்ணாசாமி முதலியார் கிரயம் பெற்ற சொத்தை குழந்தைவேலு முதலியார் பெயரில் இருந்த சொத்தையும் சேர்த்து அனுபவிக்கிறார் என்றால் ஆமாம். அதில் நான் வாடகை விட்ட சொத்தும் அடங்கும். மொத்த சொத்தும் பத்மநாபன் பெயரில் தான் பட்டா வாங்கியுள்ளது என்றால் இல்லை. அண்ணாசாமி முதலியாரின் மற்றொரு மகன் கிருஷ்ணன் பெயரில் அவர் மூலம் வந்த சொத்து பட்டாவாகியுள்ளது. உங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீடு அண்ணாசாமி முதலியார் மகன் கிருஷ்ணன் அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தை பத்மநாபன் மற்றும் அவரின் சகோதரர் சேர்ந்து அனுபவித்து வருகிறாரா என்றால் இல்லை பத்பநாபன் மட்டும் அனுபவிக்கிறார். பத்மநாபனுக்கு வீட்டை காலி செய்ய சொல்லியும் வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்யும் பொருட்டும் அறிவிப்பு வழங்கினீர்களா என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னேன்.

உங்களுக்கும் ஆதிகேசவலு முதலியாருக்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்று சொன்னால் அது தவறு. ஆதிகேசவலு முதலியார் வகையறா குழந்தைவேலு முதலியார் வாரிசுகள் கிடையாது என்று சொன்னால் அது தவறு. குழந்தைவேலு முதலியாருக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் கிடையாது என்றால் இருக்கிறார்கள். எனவே உங்கள் அப்பா வழக்கு சொத்தை கிரயம்

பெற்றதாக நீங்களும் சாட்சியளிப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை நீங்கள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை வழக்கு சொத்திற்கு எந்த சம்பந்தம் இல்லை என்று சொன்னால் தவறு. உங்கள் அப்பா பத்மநாபனுக்கு வாடகை விடவில்லை நீங்களும் அதை தொடரவில்லை என்று சொன்னால் அது தவறு.

நீங்கள் சொல்வது போல் வழக்கு சொத்து பத்மநாபனுக்கு கொடுக்க பட்ட வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்த பிறகு தான் வழக்கு தாக்கல் செய்திருப்பீர்கள் என்று சொன்னால் வாய்மொழியாக தான் ஒப்பந்தம் போடப்பட்டது. எனவே வழக்கு சொத்திற்கும் உங்களுக்கு சம்பந்தம் இல்லை காலவரையறை சட்டத்திற்கு முரணாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- *********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.